மார்பு அகலம் 81–86 செ.மீ. இருக்க வேண்டும். இந்தத் தனிப்பட்ட தகுதிகளோடு இருப்பவர்களைத்தான் காவல் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். 8-வது படிவம் பூர்த்தி செய்தவர்களே இந்தப் பணிக்குப் போதும் என்பதால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைப் பற்றிப் பிரச்சினை எழவில்லை.

திரு. நா. காசிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மலபார் ஸ்பெஷல் படை தேவையில்லையென்ற காரணத்தினுல் கலைக்கப்பட்டதா, எத்தனைபேர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மலபார் தனிக் காவல் படையைச் சேர்ந்தவர்கள் 641 பேர். அவர்களில் ஒரு ஜமேதார், 14 காவலர்களைத் தவிர மற்றவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம்

*92 வினு.—**திரு. ஏ. எம். இராஜா** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர்களின் (Secretariat N.G.G.Os') சங்கத்திடமிருந்து தொழிற்சங்க உரிமைகள் வழங்க வேண்டுமென கோரி ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்திய ஃபண்டமென்ட்டல் ரூல்ஸ்—அடிப்படை விதிகள்தான்—இப்போது அமலில் இருக்கின்றன. இன்றைய நிலைமைக்கேற்ப, தொழிலாளர்களுக்கான தொழிற்சங்க உரிமை வழங்குதல் போன்ற நிலைமைக்கேற்ப ஃபண்டமென்ட்டல் ரூல்ஸை மாற்றி, புது விதிகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1960-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கான ஃபண்டமென்ட்டல் ரூல்ஸ் விதிகளில் 4-எல், 4-எம் விதிகளின்படி, அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதோ, வேலை நிறுத்தம் செய்வதாக எச்சரிக்கை செய்வதோ கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்க உரிமைகளைக் கருத்திற் கொண்டுபோனுல், இந்த விதிகள் உயிர் அற்றுப் போகும்.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்கு தொழிற்சங்கத்தின் உரிமைகள் கொடுக்கப்படாவிட்டாலும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் படியான ஓவர்டைம் அலவன்ஸ், போனஸ் கொடுப்பது, இரகசியக் குறிப்புகளை ஒழிப்பது போன்றவற்றையாவது அரசாங்கம் செய்யுமா ?

1969 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசுப் பணியாளர்களுடைய கோரிக்கைகளை இப்போது அரசு கவனித்து வருகிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state whether this Government has taken any final step regarding the proposal pending before it for payment of fixed medical allowance to its employees and also the abolition of the personal file system which is now prevalent in this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட கோரிக்கை வந்தால் ஆராயப்படும்.

Gambling in Madras City

* 93 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Government are aware of the fact that of late, gambling in street corners in the Madras City is regularly conducted ; and

(b) if so, the steps taken to prevent such offences?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் ரெக்ரியேஷன் க்ளப் வைத்து உண்மையாகவே சூதாட்டம் ஆடுகிறார்கள். சட்டம், காவல் துறை போலீசார் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. உண்மையாகவே வசதி இல்லாதவர்கள் பொழுதுபோக்குக்காக சீட்டாடினால் கூட சூதாட்டம் ஆடுவதாகப் பிடித்துப் போய்விடுகிறார்கள். இதைத் தடுக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொழுதுபோக்குக்காக ஆடுகின்றதை யாரும் தடுப்பதில்லை. அவர்கள் கைது செய்யப் படுவதுமில்லை. சூதாட்ட முறையில் பணம் வைத்து ஆடுகின்றது தான் தடுக்கப்படுகிறது.

திரு. ரா. ராமசந்திர துரை : ரெக்ரியேஷன் க்ளப் என்று இருக்கக் கூடிய இடங்களில் உண்மையிலேயே பெரிய சூதாட்டம் நடைபெறுகிறது. அம்மாதிரி இடங்கள் சிலவற்றுக்குத்தான் போலீசார் சென்று அரஸ்டு செய்கிறார்கள். சிலவற்றுக்குப் போவதே இல்லை என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி இடங்கள் எல்லாவற்றுக்கும் சென்று நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படித் தகவல் எதுவும் வரவில்லை. எந்த இடத்தில் சூதாடினாலும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.